**செ. கு. எண்**: 279 **நாள்**: 11-08-2012

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 11.8.2012**

காவேரி – கொள்ளிட ஆற்றுப் படுகைகளில் செயல்பட்டு வரும் மணல் குவாரிகள் குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை 3.8.2012 அன்று பிறப்பித்த உத்தரவினையடுத்து, அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், கட்டுமானப் பணிகளுக்கு மணல் தங்கு தடையின்றி கிடைக்கச் செய்வது தொடர்பாகவும் எனது தலைமையில் இன்று (11.8.2012) விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், காவல் துறை தலைமை இயக்குநர், பொதுப்பணித் துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில்,

1. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் மணல் எடுப்பதை அனைத்துத் துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும்;
2. மணல் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்த்திட ஏதுவாக, புதிய குவாரிகளை உடன் தெரிவு செய்து, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்தின் (State Environment Impact Assessment Authority) அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும்;
3. சட்ட விரோதமான முறையில் ஒப்புதல் அளிக்கப்படாத இடங்களிலிருந்து மணல் எடுப்பதை தடுத்திடவும், கட்டுமானப் பணிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மணல் கிடைக்கவும் மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்

முடிவு எடுக்கப்பட்டது.

இது மட்டுமல்லாமல், நொறுங்கிய கற்களை உடைத்து மணல் தயாரிக்கும் முறையை, அதாவது Manufactured Sand-ஐ ஊக்குவிக்கும் வகையில், கற்களை நொறுக்கி மணல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு தேவையான அனுமதி வழங்கவும், செயற்கை மணலை தயாரிக்க தற்போதுள்ள கல் உடைக்கும் தொழிற்சாலைகளுக்கு (Crushing Units) உடனடி அனுமதி வழங்கவும், தேவைப்படின் இந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடன் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கவும் இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் மக்களுக்கு குறைந்த விலையில் தங்கு தடையின்றி மணல் கிடைக்க வழிவகை ஏற்படும்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**